# Padasalai's
## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores

சுராவின்

# தமிழ் உரைநூல்

## 7 ஆம் வகுப்பு

## இரண்டாம் பருவம்

2019–20 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டத்தின்படி, தயாரிக்கப்பட்டுள்ளது.

**சிறப்பம்சங்கள்**

- பாடப்பகுதிகளிலுள்ள எல்லா பிரிவுகளிலும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, இலக்கணம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், கூடுதல் வினா விடைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- மூன்று அலகு தேர்வு வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores

அறிவியல் ஆக்கம்

# இயல் 1 கலங்கரை விளக்கம்

கவிதைப்பேழை

## நூல் வெளி

கடியலூர் உருத்திரங்கண்ணனார் சங்ககாலப் புலவர். இவர் கடியலூர் என்ற ஊரில் வாழ்ந்தவர். இவர் பத்துப்பாட்டில் உள்ள பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் தொண்டைமான் இளந்திரையன். இந்நூலின் 346 முதல் 351 வரை உள்ள அடிகள் நமக்குப் பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ளன. வள்ளல் ஒருவரிடம் பரிசு பெற்றுத் திரும்பும் புலவர், பாணர் போன்றோர் அந்த வள்ளலிடம் சென்று பரிசு பெற, பிறருக்கு வழிகாட்டுவதாகப் பாடப்படுவது ஆற்றுப்படை இலக்கியம் ஆகும்.



## பாடலின் பொருள்

கலங்கரை விளக்கமானது வானம் கீழே விழுந்துவிடாமல் தாங்கிக் கொண்டிருக்கும் தூண் போலத் தோற்றமளிக்கிறது; ஏணி கொண்டு ஏறமுடியாத உயரத்தைக் கொண்டிருக்கிறது; வேயப்படாமல் சாந்து பூசப்பட்ட விண்ணை முட்டும் மாடத்தை உடையது. அம்மாடத்தில் இரவில் ஏற்றப்பட்ட எரியும் விளக்கு, கடலில் துறை அறியாமல் கலங்கும் மரக்கலங்களைத் தன் துறை நோக்கி அழைக்கிறது.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வேயாமாடம் எனப்படுவது ............................... .**

அ) வைக்கோலால் வேயப்படுவது ஆ) சாந்தினால் பூசப்படுவது
இ) ஓலையால் வேயப்படுவது ஈ) துணியால் மூடப்படுவது

[விடை: ஆ) சாந்தினால் பூசப்படுவது]

**2. உரவுநீர் அழுவம் - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ...................... .**

அ) காற்று ஆ) வானம்
இ) கடல் ஈ) மலை [விடை: இ) கடல்]

**3. கடலில் துறை அறியாமல் கலங்குவன ......................... .**

அ) மீன்கள் ஆ) மரக்கலங்கள்
இ) தூண்கள் ஈ) மாடங்கள் [விடை: ஆ) மரக்கலங்கள்]



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


**3. கடலும் கலங்கரை விளக்கமும் - ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுக.**



## கூடுதல் வினாக்கள்

**சொல்லும் பொருளும் :**

1. மதலை – தூண்
2. சென்னி – உச்சி
3. ஞெகிழி – தீச்சுடர்
4. உரவுநீர் – பெருநீர்ப் பரப்பு
5. அழுவம் – கடல்
6. கரையும் – அழைக்கும்
7. வேயா மாடம் – வைக்கோல் போன்றவற்றால் வேயப்படாது. திண்மையாகச் சாந்து பூசப்பட்ட மாடம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **'மதலை' என்னும் சொல்லுக்குப் பொருள் .......................... .**

அ) தூண் ஆ) உச்சி
இ) தீச்சுடர் ஈ) கடல் [விடை: அ) தூண்]




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores



இயல் 1 அறிவியல் ஆக்கம்

# கவின்மிகு கப்பல்

கவிதைப்பேழை

## நூல் வெளி

மருதன் இளநாகனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். கலித்தொகையின் மருதத்திணையில் உள்ள முப்பத்து ஐந்து பாடல்களையும் பாடியவர் இவரே. மருதத்திணை பாடுவதில் வல்லவர் என்பதால் மருதன் இளநாகனார் என அழைக்கப்படுகிறார்.

அகநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புலவர் பலரால் பாடப்பட்ட நானூறு பாடல்களைக் கொண்டது. இந்நூலினை நெடுந்தொகை என்றும் அழைப்பர். இந்நூலின் 255ஆம் பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

## பாடலின் பொருள்



உலகம் புடைபெயர்ந்தது போன்ற அழகு பொருந்திய தோற்றத்தை உடையது நாவாய். அது புலால் நாற்றமுடைய அலைவீசும் பெரிய கடலின் நீரைப் பிளந்து கொண்டு செல்லும். இரவும் பகலும் ஓரிடத்தும் தங்காமல் வீசுகின்ற காற்றானது நாவாயை அசைத்துச் செல்லும். உயர்ந்த கரையை உடைய மணல் நிறைந்த துறைமுகத்தில் கலங்கரை விளக்கத்தின் ஒளியால் திசை அறிந்து நாவாய் ஓட்டுபவன் நாவாயைச் செலுத்துவான்.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. இயற்கை வங்கூழ் ஆட்ட - அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ........................... .**

அ) நிலம் ஆ) நீர்

இ) காற்று ஈ) நெருப்பு [விடை: இ) காற்று]

**2. மக்கள் ....................... ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர்.**

அ) கடலில் ஆ) காற்றில்

இ) கழனியில் ஈ) வங்கத்தில் [விடை: ஈ) வங்கத்தில்]

**3. புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது ........................... .**

அ) காற்று ஆ) நாவாய்

இ) கடல் ஈ) மணல் [விடை: இ) கடல்]

**4. 'பெருங்கடல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............................ .**

அ) பெரு + கடல் ஆ) பெருமை + கடல்

இ) பெரிய + கடல் ஈ) பெருங் + கடல்

[விடை: ஆ) பெருமை + கடல்]



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


## கூடுதல் வினாக்கள்

### சொல்லும் பொருளும் :

1. உரு - அழகு
2. வங்கம் - கப்பல்
3. போழ - பிளக்க
4. எல் - பகல்
5. வங்கூழ் - காற்று
6. கோடு உயர் - கரை உயர்ந்த
7. நீகான் - நாவாய் ஓட்டுபவன்
8. மாட ஒள்ளெரி - கலங்கரை விளக்கம்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'உரு' என்பதன் பொருள் ................................ .
அ) நாவாய் ஓட்டுபவன் ஆ) கப்பல்
இ) கரை உயர்ந்த ஈ) அழகு [விடை: ஈ) அழகு]

2. 'போழ' என்பதன் பொருள் ................................ .
அ) பிளக்க ஆ) காற்று
இ) கப்பல் ஈ) கலங்கரை விளக்கம் [விடை: அ) பிளக்க]

3. 'வங்கூழ்' என்பதன் பொருள் ....................
அ) காற்று ஆ) அழகு
இ) பிளக்க ஈ) பகல் [விடை: அ) காற்று]

4. 'நீகான்' என்னும் சொல்லுக்கு ................................ என்பது பொருள்.
அ) நாவாய் ஓட்டுபவன் ஆ) கலங்கரை விளக்கம்
இ) பகல் ஈ) கப்பல் [விடை: அ) நாவாய் ஓட்டுபவன்]

5. 'வங்கம்' என்பதன் பொருள் ................................ .
அ) கப்பல் ஆ) பகல் இ) அழகு ஈ) காற்று
[விடை: அ) கப்பல்]

6. கோடு உயர் என்பதன் பொருள் .............................. .
அ) கரை உயர்ந்த ஆ) கப்பல்
இ) காற்று ஈ) பிளக்க [விடை: அ) கரை உயர்ந்த]




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


இயல் 1 அறிவியல் ஆக்கம்

# தமிழரின் கப்பற்கலை

உரைநடை உலகம்

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. தமிழர்கள் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தியது ..................**

அ) கலம் ஆ) வங்கம்

இ) நாவாய் ஈ) ஓடம் [விடை: ஈ) ஓடம்]

**2. தொல்காப்பியம் கடற்பயணத்தை .......................... வழக்கம் என்று கூறுகிறது.**

அ) நன்னீர் ஆ) தண்ணீர்

இ) முந்நீர் ஈ) கண்ணீர் [விடை: இ) முந்நீர்]

**3. கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி ..................**

அ) சுக்கான் ஆ) நங்கூரம்

இ) கண்ணடை ஈ) சமுக்கு [விடை: அ) சுக்கான்]

### கோடிட்ட இடங்களை நிரப்புக

1. கப்பல் கட்டுவதற்குப் பயன்படும் மர ஆணிகள் ...................... என அழைக்கப்படும். [விடை: தொகுதி]
2. கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது ...................... [விடை: நங்கூரம்]
3. இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் ...................... எனக் குறிப்பிடப்படும். [விடை: கண்ணடை]

### பொருத்துக

1. எரா – திசைகாட்டும் கருவி
2. பருமல் – அடிமரம்
3. மீகாமன் – குறுக்கு மரம்
4. காந்த ஊசி – கப்பலைச் செலுத்துபவர்

விடை:

1. எரா – அடிமரம்
2. பருமல் – குறுக்கு மரம்
3. மீகாமன் – கப்பலைச் செலுத்துபவர்
4. காந்த ஊசி – திசைகாட்டும் கருவி




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores




## சிந்தனை வினா

**1. இக்காலத்தில் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு கடற்பயணத்தைப் பெரிதும் மேற்கொள்ளாதது ஏன் எனச் சிந்தித்து எழுதுக.**

தற்போது விமானம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, கடற்வழி பயணம் விரும்பத்தகாத ஒன்றாக மாறிவிட்டது. காலதாமதம் காரணமாக தற்பொழுது கடல் வழி பயணத்தைத் தவிர்த்து வான்வெளிப் பயணத்தை ஏற்றனர். அதன் காரணமாகவே கடற்வழிப் பயணத்தை பெரிதும் மேற்கொள்ளுதலைத் தவிர்த்தனர்.

## கற்பவை கற்றபின்

**1. பலவகையான கப்பல்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.**

**பாய்மரக்கப்பல்கள் :**



(i) காற்றின் உதவியால் செலுத்தப்படும் கப்பல்கள் பாய்மரக்கப்பல்கள் எனப்பட்டன.

(ii) பெரிய பாய்மரம், திருக்கைத்திப் பாய்மரம், காணப் பாய்மரம், கோசுப் பாய்மரம் போன்ற பலவகையான பாய்மரங்களைத் தமிழர் பயன்படுத்தினர்.

**நீர்மூழ்கிக் கப்பல்கள் :**

(i) இவை நீரில் மூழ்கியபடியே வெகு தொலைவு செல்லக்கூடிய நீர் ஊர்தி ஆகும்.

(ii) நீர்மூழ்கிக் கப்பல்கள் போரில், பகைவர் கப்பல்களைத் தாக்குதல், முற்றுகையை முறியடித்தல், நீரில் இருந்தபடியே நிலப்பகுதியைத் தாக்குதல், இரகசியமாகச் சிறப்புப் படைகளை முக்கியப் பகுதிகளில் இறக்கி வியூகம் அமைத்தல் ஆகிய பல பணிகளைச் செய்ய வல்லவை.

**பயணிகள் கப்பல்கள் :**



(i) பயணிகள் கப்பல்களின் அளவு சிறிய ஆற்று படகுகளில் இருந்து மிக பெரிய கப்பல்கள் வரை இருக்கும்.

(ii) ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பயணிகளைக் கொண்டு செல்லும் கப்பல்கள்.

(iii) குறுகிய பயணங்களுக்குப் பயணிகள் மற்றும் வாகனங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள், இன்பப் பயணங்கள் மேற்கொள்ளப்படும் கப்பல்கள் இந்த வகையில் அடங்கும்.

**எண்ணெய்க் கப்பல்கள் :**

திரவ பெட்ரோலிய வாயு, திரவ இயற்கை எரிவாயு, வேதிப்பொருட்கள் ஆகியவற்றைச் சுமந்து செல்லும் கப்பல்கள்.


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


இயல் 1 அறிவியல் ஆக்கம்

# ஆழ்கடலின் அடியில்

விரிவானம்

## மதிப்பீடு

**1. 'ஆழ்கடலில் அடியில்' கதையைச் சுருக்கி எழுதுக.**

1886 ஆம் ஆண்டு கடலில் செல்லும் பெரிய கப்பல்களை, உலோகத்தால் ஆன உடலைக் கொண்ட ஒரு விந்தையான விலங்கு தாக்குவதாகச் செய்தி வெளியானது. அதனைக் கண்டறிய நியூயார்க் நகரிலிருந்து போர்க்கப்பல் ஒன்று புறப்பட்டது. அதில் விலங்கியல் பேராசிரியரான பியரி, அக்கப்பலின் தலைவர் ஃபராகட், திமிங்கலங்களை வேட்டையாடும் நெட் என்ற வீரர் மற்றும் பியரியின் உதவியாளர் கான்சீல் ஆகியோர் சென்றனர்.

மூன்று மாதங்கள் அவர்கள், அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் உள்ள பெருங்கடல் பரப்பில் தேடினார்கள். அவ்விலங்கு கண்ணில் படவில்லை. அதனால் அவர்கள் தங்கள் நகரத்திற்குத் திரும்ப எண்ணினர். அப்போது பளபளப்பான உடலைக் கொண்ட விலங்கு கப்பலை நோக்கி வந்தது. நெட் வலிமை வாய்ந்த ஈட்டிகளை எய்தார். அவ்விலங்கு வேகமாக மோதியதில் அவர்கள் கப்பலில் இருந்து தூக்கி வீசப்பட்டனர். மயக்கமடைந்த பியரி கண் விழித்த போது, பியரி, நெட், கான்சீல் ஆகியோர் அவ்விலங்கின் மீது அமர்ந்திருந்தனர். நெட், "இது விலங்கு இல்லை; ஒரு நீர்மூழ்கிக்கப்பல்" என்று கூறினார்.

மூவரும் அக்கப்பலின் உள்ளிருப்பவர்களை உதவிக்கு அழைத்தனர். கதவு திறக்கப்பட்டது. கப்பலின் உள்ளிருந்து வந்தவர்கள் மூவரையும் சிறைப்பிடித்தனர். நெமோ என்று ஒருவர் இம்மூவரிடம் பேசினார். "நாட்டிலஸ் என்னும் இந்த நீர்மூழ்கிக் கப்பலை ஒரு விந்தையான விலங்கு என்று நம்ப வைத்திருக்கிறோம். இவ்வுண்மை தெரிந்த உங்களை விடமாட்டேன்" என்று கூறினார்.

கப்பலினுள் எல்லா இடங்களுக்கும் சென்றனர். அதில் நூலகம் மற்றும் அருங்காட்சியகம் ஆகிய அரிய அறிவுக் கருவூலங்கள் யாருக்கும் பயன்படாமல் இருந்தன. கப்பலின் இயங்குமுறைகளைப் பற்றி நெமோவிடம் கேட்டறிந்தனர். கப்பலில் உள்ளோர் மூச்சு விடுவதற்கான காற்று எவ்வாறு கிடைக்கிறது என்பது பற்றியெல்லாம் கூறினார் நெமோ. ஒருநாள் கப்பல் கடலுக்குள் இருக்கும் மணல்திட்டில் சிக்கிக் கொண்டது.

நாட்டிலஸின் மேல்தளத்தில் நின்றபோது பக்கத்தில் ஒரு தீவு தெரிந்தது. இம்மூவரும் நெமோவிடம் அனுமதி பெற்று படகில் சென்று அத்தீவில் காய்கறிகளை வாங்கிக் கொண்டு படகில் ஏற்றினர். அத்தீவைச் சார்ந்த, மனிதர்களைக் கொன்று தின்னும் வழக்கமுடையவர்கள் துரத்தினார்கள். மூவரும் தப்பித்துக் கப்பலுக்குள் வந்துவிட்டனர். ஆனால் அம்மனிதர்கள் பல படகுகளில் வந்து கப்பலைச் சூழ்ந்து கொண்டனர். ஏழு நாட்களுக்குப் பிறகு மேல் மூடியைத் திறந்தார். அந்த மனிதர்கள் ஏணியில் ஏற முயன்றனர். நெமோ அதில் மின்சாரத்தைப் பாய்ச்சி இருந்ததால் ஓடிவிட்டனர்.


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


இயல் 1 அறிவியல் ஆக்கம்

# இலக்கியவகைச் சொற்கள்

கற்கண்டு

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் ................ .**

அ) இயற்சொல் ஆ) திரிசொல்
இ) திசைச்சொல் ஈ) வடசொல் [விடை: அ) இயற்சொல்]

2. **பலபொருள் தரும் ஒரு சொல் என்பது ..................... .**

அ) இயற்சொல் ஆ) திரிசொல்
இ) திசைச்சொல் ஈ) வடசொல்
[விடை: ஆ) திரிசொல்]

3. **வடமொழி என்று அழைக்கப்படும் மொழி .................. .**

அ) மலையாளம் ஆ) கன்னடம்
இ) சமஸ்கிருதம் ஈ) தெலுங்கு [விடை: இ) சமஸ்கிருதம்]

### பொருத்துக

1. இயற்சொல் – பெற்றம்
2. திரிசொல் – இரத்தம்
3. திசைச்சொல் – அழுவம்
4. வடசொல் – சோறு

விடை:

1. இயற்சொல் – சோறு
2. திரிசொல் – அழுவம்
3. திசைச்சொல் – பெற்றம்
4. வடசொல் – இரத்தம்

### குறுவினா

1. **மண், பொன் என்பன எவ்வகைச் சொற்கள்?**

(i) எளிதில் பொருள் விளங்கும் வகையில் அமைந்த சொற்கள் இயற்சொற்கள் எனப்படும்.




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

2. சொல் என்னும் பொருள் தரும் வேறு சொற்கள் ..............., ..................., .............
[விடை: பதம், மொழி, கிளவி]

3. இலக்கண முறைப்படி .............., .............., .............., ............. எனச் சொற்கள் நான்கு வகைப்படும். [விடை: பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்]

4. இலக்கிய வகைச் சொற்களை .............., .............., .............., ............. என நான்கு வகையாகப் பிரிக்கலாம். [விடை: இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்]

5. எளிதில் பொருள் விளங்கும் வகையில் அமைந்த சொற்கள் ............. எனப்படும்.
[விடை: இயற்சொற்கள்]

6. இயற்சொல் .............., .............., .............., ............. ஆகிய நான்கு வகையிலும் வரும். [விடை: பெயர், வினை, இடை, உரி]

7. கற்றோர்க்கு மட்டுமே விளங்கும் சொற்கள் ............. எனப்படும்.[விடை: திரிசொற்கள்]

8. லக்ஷ்மி என்பதை இலக்குமி என்றும், விஷம் என்பதை விடம் என்றும் தமிழ் எழுத்துகளால் மாற்றி எழுதுவதை ............. என்பர். [விடை: தற்பவம்]

9. வடசொற்களை .............., ............. என இருவகையாகப் பிரிப்பர்.
[விடை: தற்சமம், தற்பவம்]

10. திரிசொல் ............, ............, ............., ............. ஆகிய நான்கு வகையிலும் வரும்.
[விடை: பெயர், வினை, இடை, உரி]

## மொழியை ஆள்வோம்

**கேட்க.**

1. **கடற்பயணம் தொடர்பான கதைகளைப் பெற்றோரிடம் கேட்டு மகிழ்க.**

### சாகச கடல் பயணம்

மாலை வேளை வானம் மேகம் சூழ்ந்தது. நள்ளிரவைப் போல் வானம் இருண்டு காணப்பட்டது. ஆனால் இன்னும் சூரியன் மறையவில்லை. புயல்மழை கொட்டுவதற்கான அறிகுறிகள் தெரிந்தன. கடல் அலைகள் ஆர்ப்பாட்டம் இல்லாமல் ஒரு பனை மர அளவிற்கு ஏறி இறங்கின. அதில் 'பனை மலர்' என்ற கப்பல் ராட்டினம் போல மேலே ஏறி கீழே இறங்கியது.

பனை மலர் கப்பல் தமிழ்நாட்டின் தரங்கம்பாடி துறைமுகத்திலிருந்து கிளம்பி ஒரு மாதத்துக்கும் மேலாகிறது. இங்கிருந்து கப்பல் நிறைய ஏலம், கிராம்பு, மிளகு, பட்டை, சோம்பு, ஜாதி, பத்திரி போன்ற உணவுக்கு நல்ல வாசனை தரும் ஏராளமான பொருட்கள், தூத்துக்குடி முத்துக்கள், பவளங்கள், மாணிக்கக் கற்கள், பட்டுச் சேலைகள், பருத்தி துணிகள், சிற்பங்கள், கைவினைப் பொருட்கள் போன்ற பலவகையான பொருட்களை ஏராளமாக ஏற்றிச் சென்றனர்.

கப்பலில் ஆறு மாதங்களுக்குத் தேவையான தண்ணீர், உப்பு, அரிசி, மிளகாய், எண்ணெய் போன்றவற்றை சேமித்துக் கொண்டு போயிருந்தனர். இப்போது,

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores



**முடிவுரை :**

பயணம் மனிதர்கள் வாழ்க்கையில் அன்றாடம் வந்து போகும் முக்கிய நிகழ்வு ஆகும். தரைவழிப் பயணத்தை யாவரும் பயன்படுத்துவர். கடல்வழிப்பயணத்தில் கனரகப் பொருள்களை ஏற்றிச் செல்ல கப்பல்கள் பயன்படுகின்றன. தொழில் ரீதியாக வான்வழிப் பயணத்தைச் சிலர் பயன்படுத்துகின்றனர்.

## மொழியோடு விளையாடு

### குறுக்கெழுத்துப் புதிர்.

**பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை அறிவோம்.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | 3 | | |
| | | 4 | | | | | | |
| | | | | | | | | 5 |
| | | 6 | | 7 | | | | |
| | | | | | 8 | | | |
| | 9 | 10 | | | | | | |
| | | | | | | | 11 | |
| 12 | | | | | | | | |
| | | | 13 | | | 14 | | 15 |

**இடமிருந்து வலம்**

1. அச்சன்
2. விஞ்ஞானம்
4. பரீட்சை
10. லட்சியம்

**வலமிருந்து இடம்**

6. அபாயம்
8. தேகம்
13. சரித்திரம்
14. சத்தம்

**மேலிருந்து கீழ்**

1. அதிபர்
3. ஆச்சரியம்
7. ஆரம்பம்
12. சதம்

**கீழிருந்து மேல்**

5. ஆதி
9. உத்தரவு
11. தினம்
15. சந்தோசம்

இரண்டாம் பருவம்



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


# அலகு தேர்வு -1

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (3 × 1 = 3)

1. கடலில் துறை அறியாமல் கலங்குவன ......................... .

அ) மீன்கள் ஆ) மரக்கலங்கள்

இ) தூண்கள் ஈ) மாடங்கள்

2. 'மதலை' என்னும் சொல்லுக்குப் பொருள் ......................... .

அ) தூண் ஆ) உச்சி இ) தீச்சுடர் ஈ) கடல்

3. பலபொருள் தரும் ஒரு சொல் என்பது ...................

அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக. (3 × 1 = 3)

4. வேயாமாடம் எனப்படுவது ............................ .

5. 'கரையும்' என்னும் சொல்லுக்குப் பொருள் ........................ .

6. வடமொழி என்று அழைக்கப்படும் மொழி .................

## III. பொருத்துக. (4 × ½ = 2)

7. இயற்சொல் - பெற்றம்
8. திரிசொல் - இரத்தம்
9. திசைச்சொல் - அழுவம்
10. வடசொல் - சோறு

## IV. தொடர்களில் அமைத்து எழுதுக (2 × ½ = 1)

11. நீரோட்டம் -
12. காற்றின் திசை -

## V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும். (3 × 2 = 6)

13. மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது எது?
14. கலங்கரை விளக்கம் என்றால் என்ன?
15. நங்கூரம் எதற்கு பயன்படுகிறது?
16. குங்குமம், கமலம் என்பன எவ்வகை வடசொற்கள்?

## VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும். (2 × 3 = 6)

17. கலங்கரை விளக்கம் கப்பல் ஓட்டிகளைத் தவிர வேறு யாருக்கெல்லாம் பயன்படும் என நீங்கள் கருதுகிறீர்கள்?
18. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?
19. பண்டைத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றி எழுதுக.

## VI. அடிமாறாமல் எழுதுக. 4

20. 'வானம்' எனத் தொடங்கும் 'கலங்கரை விளக்கம்' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆ ☆ ☆



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores

இயல் 2

ஓதுவது ஒழியேல்

# இன்பத்தமிழ்க் கல்வி

கவிதைப்பேழை

## நூல் வெளி



கவிஞர், இதழாளர், தமிழாசிரியர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர் பாரதிதாசன். இவர் கவிதை, கதை, கட்டுரை, நாடகம் ஆகியவற்றைப் படைப்பதில் வல்லவர். பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இசையமுது, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, கண்ணகி புரட்சிக் காப்பியம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய பிசிராந்தையார் என்னும் நாடக நூலுக்குச் சாகித்திய அகாடமி விருது அளிக்கப்பட்டது. பாரதிதாசன் கவிதைகள் என்னும் தொகுப்பிலிருந்து தமிழ்ப்பேறு என்னும் தலைப்பில் உள்ள பாடல் இங்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

## பாடலின் பொருள்






கவிதை எழுத ஏடு ஒன்று எடுத்தேன். என்னைக் கவிதையாக எழுதுக என்று வானம் கூறியது. நீரோடையும் தாமரை மலர்களும் எங்களைக் கவி ஓவியமாகத் தீட்டுக என்றன. காடும் வயல்களும் கருநிற மேகங்களும் என் கண்களைக் கவர்ந்து, கவிதையில் இடம்பெற முயன்றன. ஆடும் மயில் போன்ற பெண்கள் அன்பினைக் கவிதையாக எழுதுக என்றனர்.

சோலையின் குளிர்ந்த தென்றல் வந்தது. பசுமையான தோகையையுடைய மயில் வந்தது. அன்னம் வந்தது. மாணிக்கம் போல் ஒளி வீசி மாலையில் மேற்குத் திசையில் மறைகின்ற கதிரவனும் வந்தான். வேல் ஏந்திய வீரர்கள், மலை போன்ற எங்களது தோள்களின் அழகினை எழுதுங்கள் என்றனர். இவ்வாறு அழகிய காட்சிகள் எல்லாம் பெருந்திரளாக வந்து தங்களைக் கவிதையாக எழுதுமாறு கூறின.

ஆனால் துன்பத்தில் கிடக்கும் என் தமிழ்நாட்டு மக்கள் அறியாமையில் தூங்கிக் கிடக்கிறார்கள். அந்தக் காட்சி என் மனத்தில் இரக்கத்தை உண்டாக்கி என் உயிரில் வந்து கலந்து விட்டது. இத்துன்பம் நீங்க அனைவரும் இன்பத்தமிழ்க் கல்வியைக் கற்றவர்கள் என்னும் நிலை ஏற்பட வேண்டும். அந்நிலை ஏற்பட்டால் வாழ்வில் துன்பங்கள் நீங்கிடும். நெஞ்சில் தூய்மை உண்டாகிவிடும். வீரம் வரும்.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது ............................... .**

அ) மயில் ஆ) குயில்
இ) கிளி ஈ) அன்னம் [விடை: அ) மயில்]

**2. பின்வருவனவற்றுள் 'மலை'யைக் குறிக்கும் சொல் ...................... .**

அ) வெற்பு ஆ) காடு
இ) கழனி ஈ) புவி [விடை: அ) வெற்பு]



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores



இயல் 2 — ஓதுவது ஒழியேல்

# அழியாச் செல்வம்

கவிதைப்பேழை

## நூல் வெளி

நாலடியார், சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட நூலாகும். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். இது நானூறு வெண்பாக்களால் ஆனது. இந்நூலை நாலடி நானூறு என்றும், வேளாண்வேதம் என்றும் அழைப்பர். திருக்குறள் போன்றே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. இந்நூல் திருக்குறளுக்கு இணையாக வைத்துப் போற்றப்படுவதை நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்னும் தொடர் மூலம் அறியலாம்.

## பாடலின் பொருள்

கல்வியைப் பொருள் போல வைத்திருப்பினும் அது பிறரால் கொள்ளப்படாது. ஒருவற்கு வாய்க்கும்படி கொடுத்தாலும் குறைவுபடாது. மிக்க சிறப்பினை உடைய அரசராலும் கவர முடியாது. ஆதலால் ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் கல்வியே ஆகும். மற்றவை செல்வம் ஆகாது.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் ………………… .**

அ) வீடு ஆ) கல்வி

இ) பொருள் ஈ) அணிகலன் [விடை: ஆ) கல்வி]

**2. கல்வியைப் போல் ……………… செல்லாத செல்வம் வேறில்லை.**

அ) விலையில்லாத ஆ) கேடில்லாத

இ) உயர்வில்லாத ஈ) தவறில்லாத [விடை: ஆ) கேடில்லாத]

**3. 'வாய்த்தீயின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………………… .**

அ) வாய்த்து + ஈயீன் ஆ) வாய் + தீயின்

இ) வாய்த்து + தீயின் ஈ) வாய் + ஈயீன் [விடை: ஆ) வாய் + தீயின்]

**4. 'கேடில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………………… .**

அ) கேடி + இல்லை ஆ) கே + இல்லை

இ) கேள்வி + இல்லை ஈ) கேடு + இல்லை

[விடை: ஈ) கேடு + இல்லை]




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


## கூடுதல் வினாக்கள்

**சொல்லும் பொருளும் :**

1. வைப்புழி – பொருள் சேமித்து வைக்கும் இடம்
2. கோட்படா – ஒருவரால் கொள்ளப்படாது
3. வாய்த்து ஈயில் – வாய்க்கும்படி கொடுத்தலும்
4. விச்சை – கல்வி

**நிரப்புக.**

1. வைப்புழி என்பதன் பொருள் .............. .[விடை: **பொருள் சேமித்து வைக்கும் இடம்**]
2. விச்சை என்பதன் பொருள் ............... . [விடை: **கல்வி**]
3. ............... சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட நூலாகும். [விடை: **நாலடியார்**]

☆ ☆ ☆




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


# இயல் 2 ஓதுவது ஒழியேல்

# வாழ்விக்கும் கல்வி

உரைநடை உலகம்

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. காலத்தின் அருமையைக் கூறும் திருக்குறள் அதிகாரம் ................. .**

அ) கல்வி ஆ) காலம் அறிதல்

இ) வினையறிதல் ஈ) மடியின்மை [விடை: ஆ) காலம் அறிதல்]

**2. கல்வியில்லாத நாடு ........................... வீடு.**

அ) விளக்கில்லாத ஆ) பொருளில்லாத

இ) கதவில்லாத ஈ) வாசலில்லாத [விடை: அ) விளக்கில்லாத]

**3. 'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர் .................. .**

அ) திருக்குறளார் ஆ) திருவள்ளுவர்

இ) பாரதியார் ஈ) பாரதிதாசன் [விடை: இ) பாரதியார்]

**4. 'உயர்வடைவோம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................. .**

அ) உயர் + வடைவோம் ஆ) உயர் + அடைவோம்

இ) உயர்வு + வடைவோம் ஈ) உயர்வு + அடைவோம்

[விடை: ஈ) உயர்வு + அடைவோம்]

**5. இவை + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ................ .**

அ) இவைஎல்லாம் ஆ) இவையெல்லாம்

இ) இதுயெல்லாம் ஈ) இவயெல்லாம் [விடை: ஆ) இவையெல்லாம்]

## சொற்றொடரில் அமைத்து எழுதுக

1. **செல்வம்** – கல்விச் செல்வமே ஒருவன் பெற வேண்டிய சிறந்த செல்வம்.
2. **இளமைப்பருவம்** – கல்வி கற்பதற்கு ஏற்ற பருவம் இளமைப்பருவம்.
3. **தேர்ந்தெடுத்து** – நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்திட வேண்டும்.


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


இயல் 2 — ஓதுவது ஒழியேல்

# பள்ளி மறுதிறப்பு

விரிவானம்

## மதிப்பீடு

**1. மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.**

மதிவாணன் கோடை விடுமுறையில் நாலைந்து நாள்கள் அக்கா வீடு, அத்தை வீடு என்று சென்று வந்தான். தொலைக்காட்சியைப் பார்த்துப் பொழுதுபோக்கினான்.

மதிவாணனின் நண்பன் கவின், "சும்மாதானே இருக்கே. வாடா பின்னலாடை நிறுவனத்துக்குப் போகலாம். புதிய உடைகள், எழுதுகோல்கள், குறிப்பேடுகள் வாங்கப் பணம் சம்பாதித்து விடுவாய்" என்றான். மதிவாணனும் சேர்ந்துவிட்டான்.

மதிவாணனுக்குப் புதிய அனுபவம் கிடைத்தது. சனிக்கிழமை வாரச் சம்பளம் கிடைத்தது. மேலும் வடை, தேநீர், இரவில் பரோட்டா, தோசை என்று சாப்பிட முடிந்தது.

வாழ்க்கை முழுவதும் தொழிலாளியா? எனச் சிந்தித்தான். தொழிலாளியாக இருப்பது கேவலமில்லை. ஆனால் படிக்கிற வயதில் வேலை தேவையா? எனச் சிந்தித்தான்.

படித்தால் வேறு வேலை கிடைக்கும். நல்ல வருமானம் வரும் எனத் தோன்றியது. கல்வியறிவு முதன்மையானது. ஒரு பட்டமாவது வாங்கவேண்டும் என எண்ணினான். அப்துல்கலாமும் அம்பேத்கரும் இருந்த விளம்பரப் பலகை கண்ணில் பட்டது. அவர்களைப் போல் உயர வேண்டுமெனில் படிக்க வேண்டும் என உணர்ந்தான்.

மதிவாணன் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த போது படிப்பறிவில்லாத முதியவர் ஒருவர், அங்கு வந்து நின்ற பேருந்து "நல்லூர் போகுமா?" என்று கேட்டார். ஒரு சிறுவன் பேருந்தின் முகப்பைப் பார்த்தான். எதுவும் பேசாமல் புன்முறுவல் பூத்தான்.

"என்னப்பா போகுமா?" என்று மீண்டும் கேட்டார். "யாருக்குத் தெரியும்? எங்களுக்குப் படிக்கத் தெரியாதே" என்று கூறியபடி ஒரு சிறுவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். பெரியவர் "இதுகூட படிச்சுச் சொல்லத் தெரியாதா?" என்றார். ஒரு சிறுவன் "பெரியவரே... இதப் படிக்கக் கூட உங்களுக்குத் தெரியாதா?" என்றான். மற்றவர்கள் சிரித்தனர். மதிவாணன் அப்பெரியவரிடம் "பேருந்து வந்தா சொல்றேன்" என்றான்.

முதியவர் கல்வியறிவு இல்லாததால் அவமானப்பட்டதைக் கவனித்தான். கல்வியறிவு இல்லையெனில் தானும் இவ்வாறு அவமானப்பட நேரும் என்ற எண்ணம் வந்தது.

நல்ல கல்வியறிவு தலைநிமிர்ந்து நிற்க வைக்கும். நல்ல படிப்புதான் சிறந்த மனிதனாக்கும் என்பதை உணர்ந்தான். வேலைக்குப் போவதை விடுத்துப் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்தான்.




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


இயல் 2

ஓதுவது ஒழியேல்

# ஓரெழுத்து ஒருமொழி, பகுபதம், பகாப்பதம்

கற்கண்டு

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை ............... .**

அ) 40 ஆ) 42 இ) 44 ஈ) 46

[விடை: ஆ) 42]

**2. 'எழுதினான்' என்பது ....................**

அ) பெயர்ப் பகுபதம் ஆ) வினைப் பகுபதம்

இ) பெயர்ப் பகாப்பதம் ஈ) வினைப் பகாப்பதம்

[விடை: ஆ) வினைப் பகுபதம்]

**3. பெயர்ப்பகுபதம் .................. வகைப்படும்.**

அ) நான்கு ஆ) ஐந்து

இ) ஆறு ஈ) ஏழு [விடை: இ) ஆறு]

**4. காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு ................. .**

அ) பகுதி ஆ) விகுதி

இ) இடைநிலை ஈ) சந்தி [விடை: இ) இடைநிலை]

### பொருத்துக

1. பெயர்ப் பகுபதம் - வாழ்ந்தான்
2. வினைப் பகுபதம் - மன்
3. இடைப் பகாப்பதம் - நனி
4. உரிப் பகாப்பதம் - பெரியார்

விடை:

1. பெயர்ப் பகுபதம் - பெரியார்
2. வினைப் பகுபதம் - வாழ்ந்தான்
3. இடைப் பகாப்பதம் - மன்
4. உரிப் பகாப்பதம் - நனி

### சரியான பகுபத உறுப்பை எழுதுக

1. போவாள் - போ + வ் + ஆள்

போ - பகுதி

வ் - எதிர்கால இடைநிலை

ஆள் - படர்க்கைப் பெண்பால் வினைமுற்று விகுதி

இரண்டாம் பருவம்


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores




## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக.**

**1.** தே என்பதன் பொருள் ............. எனப்படும். [விடை: **கடவுள்**]

**2.** நன்னூல் என்னும் இலக்கண நூலை எழுதியர் ...........[விடை: **பவணந்தி முனிவர்**]

**ஓரெழுத்து ஒரு மொழிகளும் அவற்றின் பொருளும்**

| | | |
|---|---|---|
| 1. ஆ – பசு | 15. தா–கொடு | 29. போ– செல் |
| 2. ஈ – கொடு | 16. தீ– நெருப்பு | 30. மா– மாமரம் |
| 3. ஊ – இறைச்சி | 17. தூ– தூய்மை | 31. மீ– வான் |
| 4. ஏ – அம்பு | 18. தே– கடவுள் | 32. மூ – மூப்பு |
| 5. ஐ – தலைவன் | 19. தை– தைத்தல் | 33. மே– அன்பு |
| 6. ஓ – மதகுநீர் தாங்கும் பலகை | 20. நா– நாவு | 34. மை– அஞ்சனம் |
| 7. கா– சோலை | 21. நீ– முன்னிலை ஒருமை | 35. மோ– முகத்தல் |
| 8. கூ– பூமி | 22. நே– அன்பு | 36. யா– அகலம் |
| 9. கை– ஒழுக்கம் | 23. நை– இழிவு | 37. வா– அழைத்தல் |
| 10. கோ–அரசன் | 24. நோ– வறுமை | 38. வீ– மலர் |
| 11. சா– இறந்துபோ | 25. பா– பாடல் | 39. வை– புல் |
| 12. சீ– இகழ்ச்சி | 26. பூ– மலர் | 40. வௌ– கவர் |
| 13. சே– உயர்வு | 27. பே – மேகம் | 41. நொ– நோய் |
| 14. சோ– மதில் | 28. பை– இளமை | 42. து– உண் |

## மொழியை ஆள்வோம்

**கேட்க.**

**1. சிறந்த கல்வியாளர்களின் சொற்பொழிவுகளை இணையத்தில் கேட்டு மகிழ்க.**

மாணவர்கள் தாங்களாகவே செய்ய வேண்டியவை

### கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக

**1. கல்வியின் சிறப்பு**

அனைவருக்கும் வணக்கம்!

நான் கல்வியின் சிறப்பு என்ற தலைப்பில் பேசவிருக்கிறேன். இன்றைய உலகின் இன்றியமையாத ஒன்றாகத் திகழ்வது யாதெனில் கல்வியே ஆகும். அனைவருக்கும் பகுத்தறிவு தேவைப்படுகிறது. அவர்களுக்குப் பகுத்தறியும் சக்தியைக் கொடுப்பதே கல்வியின் சிறப்பாகும்.


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


## நிற்க அதற்குத் தக

### என் பொறுப்புகள்

1. பாடப்புத்தகங்கள் மட்டுமன்றிப் பிற புத்தகங்களையும் படிப்பேன்.
2. பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை எப்போதும் மதித்து நடப்பேன்.

### கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. கோடை விடுமுறை | - Summer Vacation | 5. நீதி | - Moral |
| 2. குழந்தைத் தொழிலாளர் | - Child Labour | 6. சீருடை | - Uniform |
| 3. பட்டம் | - Degree | 7. வழிகாட்டுதல் | - Guidance |
| 4. கல்வியறிவு | - Literacy | 8. ஒழுக்கம் | - Discipline |

☆ ☆ ☆



www.surabooks.com


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores

இயல் 3

கலை வண்ணம்

# ஒரு வேண்டுகோள்

கவிதைப்பேழை

## நூல் வெளி

தேனரசன் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். இவர் வானம்பாடி, குயில், தென்றல் போன்ற இதழ்களில் கவிதைகள் எழுதியுள்ளார். இவரது கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள் எள்ளல் சுவையோடு வெளிப்படும். மண்வாசல், வெள்ளை ரோஜா, பெய்து பழகிய மேகம் ஆகிய கவிதை நூல்களை எழுதியுள்ளார். பாடப் பகுதியிலுள்ள கவிதை பெய்து பழகிய மேகம் என்னும் நூலிலிருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளது.

## பாடலின் பொருள்

கலையுலகப் படைப்பாளர்களே! மண்ணின் அழகுக்கு அழகு சேர்ப்பவர்களே! உங்களுக்கு ஒரு மனித சமுதாயத்தின் வேண்டுகோள்!

நீங்கள் பாறை உடைப்பவரின் சிலையைச் செதுக்கினால், அதில் வியர்வை நாற்றம் வீசவேண்டும். உழவரின் உருவ வார்ப்பாக இருந்தால், அதில் ஈரமண்ணின் மணம் வீச வேண்டும்.

தாயின் மகிழ்ச்சியான உருவத்தை ஓவியமாக வரைந்தால், அவரின் முகத்தில் அன்பும் பாசமும் நிறைந்திருக்க வேண்டும். சிறு குழந்தையின் சித்திரத்தைத் தீட்டினால் அதன் உடலில் பால் மணம் கமழ வேண்டும்.

ஆல்ப்ஸ் மலைச் சிகரங்கள், அட்லாண்டிக் பெருங்கடல் அலைகள், அமேசான் காடுகள், பனிபடர் பள்ளத்தாக்குகள், தொங்கும் தோட்டங்கள் என இயற்கையின் விந்தைத் தோற்றங்கள் எவையும் கலைவடிவம் பெறலாம். ஆனால் அதில் மானுடப் பண்பு கட்டாயமாக இருக்க வேண்டும். மானுடம் இல்லாத எந்த அழகும் அழகன்று. மனிதன் கலக்காத எதிலும் உயிர்ப்பில்லை.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மயிலும் மானும் வனத்திற்கு ................................ தருகின்றன.**

அ) களைப்பு ஆ) வனப்பு

இ) மலைப்பு ஈ) உழைப்பு [விடை: ஆ) வனப்பு]

**2. மிளகாய் வற்றலின் ....................... தும்மலை வரவழைக்கும்.**

அ) நெடி ஆ) காட்சி

இ) மணம் ஈ) ஓசை [விடை: அ) நெடி]



orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


## சிந்தனை வினா

**நீங்கள் ஒரு கலைஞராக இருந்தால் எத்தகைய படைப்புகளை உருவாக்குவீர்கள்?**

நான் ஒரு கலைஞராக இருந்தால் பச்சைப்பசேல் என விளங்கும் மலைகள், அங்கு விழும் அருவிகள், பயமறியாமல் பறக்கும் பறவைகள், புலி, மான், சிங்கம் என அனைத்து வனவாழ் விலங்குகளும் அச்சமின்றி அருவியில் நீர் அருந்துதல், ஒன்றையொன்று நட்புடன் நோக்குதல் இவற்றை உருவாக்குவேன்.

## கற்பவை கற்றபின்

**1. உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒரு கலை பற்றிய தகவல்களைத் திரட்டுக.**

**மயிலாட்டம் :**

மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர், தன் உருவத்தை மறைத்துக் கொண்டு, நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடும் ஆட்டமே மயிலாட்டமாகும். நையாண்டி மேளம் இசைக்க, காலில் கட்டப்பட்டுள்ள சலங்கை ஒலிக்க மயிலின் அசைவுகளை ஆடிக்காட்டுவர்.

கரகாட்டத்தின் துணையாட்டமாகவும் மயிலாட்டம் ஆடப்படுகிறது. ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல், இறகை விரித்தாடுதல், தலையைச் சாய்த்தாடுதல், தாவியாடுதல், இருபுறமும் சுற்றியாடுதல், அகவுதல், தண்ணீர் குடித்துக் கொண்டே ஆடுதல் ஆகிய அடவுகளைக் கலைஞர்கள் இவ்வாட்டத்தில் ஆடிக் காட்டுவர்.

**2. உழைப்பாளர்களின் பெருமையைக் கூறும் கவிதைகளைத் தொகுத்து வந்து வகுப்பறையில் பகிர்க.**

உழைப்பு இல்லையேல்
  உணவும், மகிழ்ச்சியும்
இல்லை இன்று
  உழைத்தால் வயதான போது
உட்கார்ந்து உண்ணலாம்
  உழைக்க வேண்டிய காலத்தில்
உழைக்கவில்லை என்றால்
  ஓய்வு எடுக்க வேண்டிய
காலத்தில் உழைக்க வேண்டும்
  உயிரினங்கள் கூட உழைக்கின்றன
கையிருந்தும் உழைக்காமல்
  இருந்தால் வாழ்க்கை இல்லாமலாகும்.




Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


இயல் 3 கலை வண்ணம்

# கீரைப்பாத்தியும் குதிரையும்

[இரட்டுற மொழிதல்]

கவிதைப்பேழை

## நூல் வெளி

காளமேகப் புலவரின் இயற்பெயர் வரதன். மேகம் மழை பொழிவது போலக் கவிதைகளை விரைந்து பாடியதால் இவர் காளமேகப்புலவர் என்று அழைக்கப்பட்டார். திருவானைக்கா உலா, சரசுவதி மாலை, பரபிரம்ம விளக்கம், சித்திர மடல் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவரது தனிப்பாடல்கள் தனிப்பாடல் திரட்டு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளன. அந்நூலிலிருந்து ஒரு பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

## பாடலின் பொருள்

### கீரைப்பாத்தியில்

மண் கட்டிகளை அடித்துத் தூளாக்குவர். மண்ணை வெட்டித் தடுத்துப் பாத்திகளாக்கி வைத்திருப்பர். வாய்க்காலில் மாறி மாறி நீர் பாய்ச்சுவர். நீர் கடைமடையின் இறுதி வரை சென்று மாற்றி விடத் திரும்பும்.

### குதிரை

வண்டிகளில் கட்டி, அடித்து ஓட்டப்படும், கால் மாறிமாறிப் பாய்ந்து செல்லும்; எதிரிகளை மறித்துத் தாக்கும்; போக வேண்டிய இடம் முழுவதும் சென்று மீண்டும் திரும்பி வரும்.

இக்காரணங்களால் கீரைப் பாத்தியும், ஏறிப் பயணம் செய்யும் குதிரையும் ஒன்றாகக் கருதப்படும்.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. 'ஏறப் பரியாகுமே' என்னும் தொடரில் 'பரி' என்பதன் பொருள் .......................... .**

அ) யானை ஆ) குதிரை
இ) மான் ஈ) மாடு [விடை: ஆ) குதிரை]

**2. பொருந்தாத ஓசை உடைய சொல் ...................... .**

அ) பாய்கையால் ஆ) மேன்மையால்
இ) திரும்புகையில் ஈ) அடிக்கையால் [விடை: இ) திரும்புகையில்]

**3. 'வண்கீரை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .......................... .**

அ) வண் + கீரை ஆ) வண்ணம் + கீரை
இ) வளம் + கீரை ஈ) வண்மை + கீரை

[விடை: ஈ) வண்மை + கீரை]

**4. கட்டி + அடித்தல் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .............................. .**

அ) கட்டியிடுத்தல் ஆ) கட்டியடித்தல்
இ) கட்டிஅடித்தல் ஈ) கட்டுஅடித்தல்

[விடை: ஆ) கட்டியடித்தல்]


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores





இயல் 3

கலை வண்ணம்

# பேசும் ஓவியங்கள்

உரைநடை உலகம்

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. குகை ஓவியங்களில் வண்ணம் தீட்டப் பயன்பட்ட பொருள்களில் ஒன்று ................ .**

அ) மண்துகள் ஆ) நீர் வண்ணம்
இ) எண்ணெய் வண்ணம் ஈ) கரிக்கோல் [விடை: அ) மண்துகள்]

**2. நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாறு வரையப்படும் ஓவியம் ........................ .**

அ) குகை ஓவியம் ஆ) சுவர் ஓவியம்
இ) கண்ணாடி ஓவியம் ஈ) கேலிச்சித்திரம்
[விடை: ஈ) கேலிச்சித்திரம்]

**3. 'கோட்டோவியம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................ .**

அ) கோடு + ஓவியம் ஆ) கோட்டு + ஓவியம்
இ) கோட் + டோவியம் ஈ) கோடி + ஓவியம்
[விடை: அ) கோடு + ஓவியம்]

**4. 'செப்பேடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................. .**

அ) செப்பு + ஈடு ஆ) செப்பு + ஓடு
இ) செப்பு + ஏடு ஈ) செப்பு + யேடு [விடை: இ) செப்பு + ஏடு]

**5. எழுத்து + ஆணி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ................. .**

அ) எழுத்துஆணி ஆ) எழுத்தாணி
இ) எழுத்துதாணி ஈ) எழுதாணி [விடை: ஆ) எழுத்தாணி]

## கோடிட்ட இடங்களை நிரப்புக

1. கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் ................... . [விடை: பாரதியார்]

2. கலம்காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது ..................... .[விடை: துணி ஓவியம்]

3. மன்னர்களின் ஆணைகளையும் அரசு ஆவணங்களையும் .................... மீது பொறித்துப் பாதுகாத்தனர். [விடை: செப்பேடுகளின்]


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


இயல் 3 கலை வண்ணம்

# தமிழ் ஒளிர் இடங்கள்

விரிவானம்

## மதிப்பீடு

**1. நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால், சுற்றுலாக் கையேடு என்னும் பகுதியில் உள்ள இடங்களைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்?**

நான் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால், சுற்றுலாக் கையேடு என்னும் பகுதியில் உள்ள இடங்களைப் பார்வையிட வருபவர்களுக்கு இவ்வாறு விளக்கி கூறுவேன்.

**தஞ்சை சரசுவதி மகால் நூலகம் :**

(i) இதுதான் தஞ்சை சரசுவதி மகால் நூலகம்.

(ii) இந்தியாவில் உள்ள தொன்மையான நூலகங்களுள் ஒன்று.

(iii) கி.பி. 1122 முதல் இயங்கி வருகிறது என்று கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன.

(iv) இங்குத் தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச் சுவடிகளும் கையெழுத்துப் படிகளும் உள்ளன.

(v) தலை சிறந்த ஓவியங்களும் தொன்மையான இசைக்கருவிகளும் இடம்பெற்றுள்ளன.

**தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் :**

(i) இப்பல்கலைக்கழகம் கி.பி. 1981 இல் தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது.

(ii) இதன் பரப்பளவு ஆயிரம் ஏக்கர்.

(iii) வானத்தில் இருந்து பார்த்தால், 'தமிழ்நாடு' என்ற எழுத்துகள் தெரியும் வகையில் இதன் கட்டட அமைப்பு உள்ளது.

(iv) இந்திய நாகரித்தின் பண்பாட்டுக் கூறுகளை ஆராய்வதே இதன் நோக்கம்.

(v) இங்குக் கலை, சுவடி, வளர்தமிழ், மொழி, அறிவியல் என ஐந்து புலங்களும் இருபத்தைந்து துறைகளும் உள்ளன.

(vi) இங்குச் சித்த மருத்துவத்துறை மூலம் மருத்துவத் தொண்டு செய்யப்படுகிறது.

(vii) இந்திய ஆட்சிப் பணி பயிற்சியாளர்களுக்குத் தமிழ் மொழிப் பயிற்சி அளிக்கிறது.

(viii) பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

**உ.வே.சா. நூலகம் – சென்னை :**

(i) இந்நூலகம் கி.பி. 1942 இல் தொடங்கப்பட்டது.

(ii) தமிழ், தெலுங்கு, வடமொழி உள்ளிட்ட பல்வேறு மொழி நூல்கள் உள்ளன.

(iii) 2128 ஓலைச்சுவடிகளும் 2941 தமிழ் நூல்களும் உள்ளன.

**கீழ்த்திசை நூலகம் – சென்னை :**

(i) இந்நூலகம் கி.பி. 1869ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

(ii) இங்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச்சுவடிகள் உள்ளன.




orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


இயல் 3 கலை வண்ணம்

# தொழிற்பெயர்

கற்கண்டு

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. பின்வருவனவற்றுள் விகுதி பெற்ற தொழிற்பெயர் எது?**

அ) எழுது ஆ) பாடு இ) படித்தல் ஈ) நடி

[விடை: இ) படித்தல்]

**2. பின்வருவனவற்றுள் முதனிலை திரிந்த தொழிற்பெயர் எது?**

அ) ஊறு ஆ) நடு
இ) விழு ஈ) எழுதல் [விடை: அ) ஊறு]

### பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. | ஓட்டம் | – முதனிலைத் தொழிற்பெயர் |
| 2. | பிடி | – முதனிலை திரிந்த தொழிற்பெயர் |
| 3. | சூடு | – விகுதி பெற்ற தொழிற்பெயர் |

**விடை:**

| | | |
|---|---|---|
| 1. | ஓட்டம் | – விகுதி பெற்ற தொழிற்பெயர் |
| 2. | பிடி | – முதனிலைத் தொழிற்பெயர் |
| 3. | சூடு | – முதனிலை திரிந்த தொழிற்பெயர் |

### சிறுவினா

**1. வளர்தல், பேசுதல் - இவை எவ்வகைப் பெயர்கள்? விளக்கம் தருக.**

(i) வளர்தல், பேசுதல் – இவை விகுதி பெற்ற தொழிற்பெயர்கள்

(ii) 'வளர்', 'பேசு' என்ற வினைப் பகுதிகள் 'தல்' என்ற விகுதியோடு சேர்ந்து தொழிற்பெயர்களாக அமைந்துள்ளன.

(iii) இவ்வாறு வினைப் பகுதியுடன் தொழிற்பெயர் விகுதி சேர்ந்து வருவதனால் விகுதி பெற்ற தொழிற்பெயராயிற்று.




Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## பின்வரும் பத்திகளைப் படித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க

சாலை விபத்துகளைத் தவிர்க்கச் சாலை விதிகளை அறிந்து ஒவ்வொருவரும் வாகனங்களை ஓட்ட வேண்டும்.

சாலையில் வாகனங்களை இடப்புறமாகவே செலுத்த வேண்டும். இருவழிச் சாலையின் மையத்தில் விட்டுவிட்டுப் போடப்பட்டுள்ள வெள்ளைக்கோடு இரு போக்குவரத்துக்காகச் சாலை சரி சமமாகப் பிரிக்கப்பட்டுள்ளதைக் குறிக்கும். வாகனங்களை முந்துவதற்குக் கோட்டுக்கு வலது பக்கம் உள்ள சாலையைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி உண்டு. இருவழிச் சாலையின் மையத்தில் தொடர்ச்சியாக வெள்ளை அல்லது மஞ்சள் கோடு வரையப்பட்டிருந்தால் முந்துவதற்கு வலது பக்கச் சாலையைப் பயன்படுத்தக்கூடாது. இரட்டை மஞ்சள் கோடு வரையப்பட்டிருந்தால் முந்துவதற்கு எக்காரணம் கொண்டும் வலது பக்கச் சாலையைப் பயன்படுத்தக் கூடாது.

ஒருவழிப்பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள திசையில் மட்டும் வாகனங்களைச் செலுத்த வேண்டும். தடக்கோடுகள் இடப்பட்டுள்ள சாலையில் தடத்தின் உள்ளேயே வாகனங்களைச் செலுத்த வேண்டும். வாகனத்தைப் பின்தொடரும்போது மிகவும் நெருக்கமாகப் பின்தொடரக் கூடாது. திரும்பும் போது சைகை காட்ட அடையாள விளக்கை ஒளிரச் செய்ய வேண்டும்.

**வினாக்கள் :**

**1. சாலையின் எந்தப் பக்கமாக வாகனங்களைச் செலுத்த வேண்டும்?**

சாலையின் இடப்புறமாகவே வாகனங்களைச் செலுத்த வேண்டும்.

**2. விட்டுவிட்டுப் போடப்படும் வெள்ளைக்கோடு எதனைக் குறிக்கும்?**

விட்டுவிட்டுப் போடப்படும் வெள்ளைக்கோடு இரு போக்குவரத்துக்காகச் சாலை சரிசமமாகப் பிரிக்கப்பட்டுள்ளதைக் குறிக்கும்.

**3. எந்தக் கோட்டைத் தாண்டி வாகனங்களை முந்திச் செல்ல அனுமதி இல்லை?**

இரட்டை மஞ்சள் கோட்டைத் தாண்டி வாகனங்களை முந்திச் செல்ல அனுமதி இல்லை.

**4. ஒருவழிப் பாதை எனப்படுவது யாது?**

ஒருவழிப் பாதை என்பது சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள திசையில் மட்டுமே வாகனங்களைச் செலுத்துவது ஆகும்.

**5. வாகனங்களைப் பின் தொடர்வதற்கான முறையைக் கூறு.**

வாகனங்களைப் பின்தொடரும் போது மிகவும் நெருக்கமாகப் பின் தொடரக் கூடாது.

This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


இயல் 3

வாழ்வியல்

# திருக்குறள்



## ஆசிரியர் குறிப்பு



| | |
|---|---|
| பெயர் | : திருவள்ளுவர் |
| பெற்றோர் | : ஆதி, பகவன் |
| மனைவி | : வாசுகி |
| ஊர் | : மயிலை |
| காலம் | : கி.மு. 31-ஆம் நூற்றாண்டு |
| சிறப்புப் பெயர்கள் | : தெய்வப்புலவர். நான்முகனார், மாதானுபங்கி, பெரு நாவலர், பொய்யில் புலவர். |

## நூல் வெளி

இந்நூல் மூன்று பிரிவுகளைக் கொண்டது அவை :

| | |
|---|---|
| 1. அறத்துப்பால் | : இயல்-4 பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் 38 அதிகாரம் - 380 குறள்பாக்கள் |
| 2. பொருட்பால் | : இயல் 3 - அரசியல், அங்கவியல், ஒழிபியல் 70 அதிகாரம் - 700 குறட்பாக்கள் |
| 3. இன்பத்துப்பால் | : இயல் 2 - களவியல், கற்பியல் 25 அதிகாரம் - 250 குறள் |
| 4. வேறுபெயர்கள் | : முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், உலகப்பொதுமறை, வாயுறை வாழ்த்து. |

## கல்வி

**1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

**தெளிவுரை** : கற்க வேண்டியவற்றைப் பிழை இல்லாமல் கற்க வேண்டும். கற்றபின் கற்ற வழியில் நடக்க வேண்டும்.

**2. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு.**

**தெளிவுரை** : எண்ணும் எழுத்தும் வாழும் மக்களுக்குக் கண்கள் போன்றவை.


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
For Full Book Order Online and Available at All Leading Bookstores


# அலகு தேர்வு-3

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (3 × 1 = 3)

1. மிளகாய் வற்றலின் ..................... தும்மலை வரவழைக்கும்.

அ) நெடி ஆ) காட்சி இ) மணம் ஈ) ஓசை

2. பொருந்தாத ஓசை உடைய சொல் ...................... .

அ) பாய்கையால் ஆ) மேன்மையால்

இ) திரும்புகையில் ஈ) அடிக்கையால்

3. தன்குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புவரிடம் .......... இருக்கக் கூடாது.

அ) சோம்பல் ஆ) சுறுசுறுப்பு இ) ஏழ்மை ஈ) செல்வம்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக. (3 × 1 = 3)

4. அன்னை தான் பெற்ற ......................... சிரிப்பில் மகிழ்ச்சி அடைகிறாள்.

5. 'ஏறப் பரியாகுமே' என்னும் தொடரில் 'பரி' என்பதன் பொருள் ......................... .

6. நாட்காட்டி ஓவியங்களைப் .............. என்றும் அழைப்பர்.

## III. பொருத்துக (4 × ½ = 2)

7. கற்கும் முறை – செயல்
8. உயிர்க்குக் கண்கள் – கல்வி
9. விழுச்செல்வம் – பிழையில்லாமல் கற்றல்
10. எண்ணித் துணிக – எண்ணும் எழுத்தும்

## IV. இடைச்சொல் 'ஐ' சேர்த்துத் தொடரை மீண்டும் எழுதுக. (2 × ½ = 1)

11. கடல் பார்த்தாள் –
12. புல் தின்றது –

## V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும். (3 × 2 = 6)

13. ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?
14. இரட்டுற மொழிதல் என்றால் என்ன?
15. குகை ஓவியங்களில் இருந்து நாம் அறியும் செய்திகள் யாவை?
16. தீமை உண்டாக்கும் இரண்டு செயல்களை எழுதுக.

## VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும். (2 × 3 = 6)

17. கேலி சித்திரம் என்றால் என்ன?
18. சிற்பங்களும் ஓவியங்களும் எவ்வாறு அமைய வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?
19. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.

## VI. அடிமாறாமல் எழுதுக. 4

20. 'கட்டி' எனத் தொடங்கும் 'கீரைப்பாத்தியும் குதிரையும்' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆ ☆ ☆


orders@surabooks.com Ph : 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com